பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத்தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; செய, ஆடி. உகூ 13—8—54 தளிர்-43

## வாழும் வழி

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதிராலே சார்வானே"

(திருவாசகம்)

தமிழ் நாட்டில் சமய குரவர்கள் நால்வரும், ஆழ்வார்கள் பன்னிருவரும் தெய்வத் திருவருட் சக்திமயமானவர்கள்; எல்லாம் வல்லவரான அவர்கள் என் செய்தனர்? தமிழ் மறைகளை உலகுய்யத் தந்துள்ளனர். எம் முறையில் தந்தனர்? திருப்பதிகளில் உள்ள ஓவிய உருவைப் போற்றி வணங்கும் வாயிலாகத் தமிழ் மறைகளைத் தந்தனர். அவர்கள் திருப்பதிகட்கு நேரே சென்றும், செல்லாமலும் பாடினர். அவர்களால் பாடல் பெற்ற திருப்பதிகள் ஆயிரத்து அற்றுப்பதினாறு (1008-108) அவர்களின் மறைமொழிகட்கு எவ்வளவு ஆற்றல் உண்டோ அவ்வளவும் அவர் தந் திருநோக்கம் பெற்ற கோயில்கட்கும் உண்டு. அக் கோயில்களை விடுத்து அவரது நல்லெண்ணங்கள் நீங்கமாட்டா உலகில் உள்ள தீமைகள் அத்தனையும் ஒன்று சேர்ந்து கோயில்களைத் தாக்கினும் ஆங்கு நின்று நிலவும் நல்லெண்ணங்கள் அசையவோ அகலவோ மாட்டா. பெரியோர் நோக்குப் படிந்த கோயில்கட்கு அத் தீமைகளை நீறுக்கும் ஆற்றல் உண்டு.

ஞாயிறு, திங்கள், உலகம் முதலிய எல்லாம் அழியலாம். பெரியோர் எண்ணங்கள் அழியா. கோயில்கள் அழிந்தாலும் அவைகளைச் சூழ்ந்துள்ள நல்லெண்ணங்கள் அழியாமல் மீண்டும் ஒரு காலத்தில் கோயிலாகும். கோயில் கல், மண், சுண்ணம் அன்று. அஃது நல்ல வாய்ப்பான எண்ணம்; ஆற்றல் தங்கிய எண்ணம்; அருளடிப்படை வாய்ந்த எண்ணம். தியானத்திற் சிறந்த நல்லோர்கட்குப் பெரும் ஆற்றலையும், உலகைத் திருத்தும் வல்லமையையும்-இறைத்தன்மையையும் வழங்கியே வருகின்றது.

கோயில் அமைப்பு தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாயின; இத்துணை ஆண்டுகளாக ஆங்காங்குள்ள ஓவிய உருவத்தை நோக்கி 'தெய்வமே என எண்ணியும் வணங்கி வாழ்த்தியும் இருக்கின்றனர் பல கோடிக் கணக்கான மக்கள்.

நன் மக்கள் நோக்கினின்று திரண்டு பெருகுஞ் சக்தியைப் பார்க்கிலும் ஞானிகளின் நோக்கின் சக்தி வல்லமையுடையது. அச் சக்தியினும் குருமார் நோக்கினின்றும் பிறக்குஞ் சக்தி சொல்லொணு ஆற்றல் வாய்ந்தது அக் குருமார்களின் தெய்விக அருட்சக்தி நூல்களிலும், கோயில்களிலும் இறங்கி மக்கள் வாழ வழி வகுத்து வருகின்றது.

'வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகள் ஒழிந்து போவதே இல்லை' (லூக்கா 21. 33)

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 6 | 13-8-54 வெள்ளி. | 43 |


# சோழ நாட்டுத் திருப் பயணம்

தொடக்க முயற்சிகளும்—
ஏக்கமும்:

ஆண்டு தோறும் சில கிழமைகள் ஆசிரியர் மேற் கொள்ளும் திருப்பயண வரிசையில் இவ்வாண்டு சோழ நாடு இடம் பெற்றது.

தம்மோடு இணைந்து வரத்தக்க அன்பர் மாணவர்களின் வசதிகளைப் பார்த்தே ஆசிரியர் தம் திருப் பயணத்தை அருளோடு அமைத்துக் கொள்வது வழக்கம்.

சோழ நாட்டில் பாடல் பெற்ற பதிகளின் மொத்த எண்ணிக்கை 190 ஆகும்; ஆகவே இவ்வளவையும் ஒரே ஆண்டில் வழிபடுவது முடியாது; உடன் வருபவருக்கும் தத்தம் அலுவலிடங்களில் தொடர்பாக விடுமுறை கிடைப்பது கடினம். ஆனால், அதற்காக ஆண்டுக் கணக்கில் இத் திருப் பயணக் கடமையை நீட்டித்துச் செய்து கொண்டிருக்கவும் முடியாது. இன்னும் பற்பல கடமை இருக்கின்றன. எனவே, இரண்டாண்டுகளில் சோழ நாட்டை முடித்து விடலாம் என்றார் ஆசிரியர். சோழ நாட்டை வழிபட, எவ்வளவு விரைவாய் வழிபட்டாலும் மூன்று ஆண்டுகளாவது வேண்டும் என்று தெரிகிறது.

நடுநாட்டுத் திருப்பயணத்தின் போதே சோழ நாட்டுத் திருப் பயணம் பற்றி ஓரளவு எண்ணிப் பார்த்தோம் திருநெல்வாயில் அரத்துறையில் எதிர்பாரா வகையில் எங்கள் திருக் கூட்டத்தைக் கண்டு ஈடுபட்ட அன்பர் குடந்தை தேவாரம் சுந்தரேசன் (இசை விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்) அவர்களிடம் கலந்து பேசினோம் அவர்கள் அப்போதே தில்லைத் திருமுறைக் கழகத்தையும், அதன் தலைவர் திரு, கணபதியா பிள்ளை அவர்களையும், குடந்தைச் சிவனடியார் திருக் கூட்டத்தையும், அதன் தலைவர் திரு. P T S. குமாரசாமி செட்டியார் அவர்களையும் பற்றித் தெரிவித்து ஊக்க மூட்டினார்கள்.

பின்னால் சில திங்களில் அடியேங்கள் கேட்டுக் கொண்டபடி சோழ நாட்டின் 190 திருப்பதிகளையும் முறையாக வழிபடுவதற்கு வேண்டிய குறிப்புக்களை விளக்கமாகவும் விரிவாகவும் எழுதி அனுப்பி உதவி மகிழ்வித்தார்கள்.

'சிதைந்த சிவாலயங்கள்' என்ற தலைப்பில் வாய்ப்பு நேரிடும் இடங்களில் எல்லாம் வேண்டிய குறிப்புக்களையும், படங்களையும் தொகுத்து வைத்துக் கொண்டு உருக்கமாகச் சொற் பொழிவுகள் ஆற்றி வரும் போன்பர் சுந்தரப் பெருமாள் கோயில், திரு, சிவ குருநாத பிள்ளை அவர்களும் வழி வகைகள் பற்றிக் கேட்டதற்குச் சில கடிதங்கள் எழுதியனுப்பியிருந்தார்கள்.

காஞ்சிபுரம் கணபதி வாசக சாலையினர் வெளியிட்டுள்ள 'தல வழிகாட்டி' என்ற நூலும் இவ்வாண்டுத் திருப்பயணதிட்டத்தை வகுப்பதற்குப் பெரிதும் உதவியாக இருந்தது

29-1-54 அன்று வெளிவந்த 'முல்லைக் கொடி'யில் முதன் முதலாகச் சோழ நாட்டுத் திருப்பயணத்தைப் பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது. அடுத்து ஆசிரியர் அவர்களும் தம் சொற் பொழிவுக் காலங்களில் அன்பர்களுக்கு அவ்வப்போது இது பற்றித் தெரிவித்து வந்தார்கள்.

என்றாலும், பல்வேறு கடமைகளும், சென்னையில் மார்ச்சுத் திங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்ற குருகுல விழாவும், திருக்குறள் ஆக்க விளக்கச் சொற்பொழிவுகளும் திருப்பயண ஏற்பாடுகளைக் கருதியபடி முன்னதாகவே செய்யவிடவில்லை.

நாட்களோ நெருங்கிவிட்டன; திருப்பயணம் பற்றிச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளோ ஏராளமாக இருந்தன; திருக்கழுக் கழுக்குன்ற விழாக் காலமும் நெருங்கிக்கொண்டிருந்தது. இந்நிலையில் குருகுல விழாக் கழித்ததும் அடியேனுடைய உடல் நலம் (அதற்கு முன்னும் சில கிழமைகள் சரி இல்லாமல் இருந்தது, மீண்டும்) கெட்டுவிட்டது.

ஏப்ரல் இறுதியில் எதும் செய்யக் கூடாத நிலை நேர்ந்து விட்டது; மருத்துவர் மூன்று மாத காலம் விடுமுறை கொடுத்தார்; திருவருளால் 'மே'த்திங்கள் தொடக்கத்திலேயே உடல் ஓரளவு குணம் கண்டது; வீட்டோடு இருந்து பயணம் பற்றிய கடிதப் போக்கு வரவுகளைச் செய்ய முடிந்தது; பயணத்திலும் கலந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எழுந்தது; குருகுல அன்பர்கள் திரு, R நடராசன் அவர்களும், திரு, மயிலை இராமலிங்கம் அவர்களும் நாடோறும் முறையே மாலையிலும் காலையிலும் அடியேனுடைய இல்லத்துக்கு வந்து பயணம் பற்றிய கடிதப் போக்கு வரவுகளைச் செய்ய மிகவும் உதவி செய்தார்கள்.

மேலே குறிப்பிட்ட மூன்று பேருடைய வழி காட்டி விளக்கங்களைப் பார்த்தும் சோழ நாட்டு அறிஞர் அன்பர்களின் விடைக் கடிதங்களைக் கொண்டும், எண்ணித் திருவருள் உணர்த்திய படி தில்லை முதல் குடந்தை வரை இவ்வாண்டு பயணத்தை மேற்கொள்வது என்றும், இன்ன இன்ன திருவூர்களை வழிபடுவது என்றும் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டோம்.

திட்டத்துக்கேற்பட்ட எல்லாத் திருக்கோயில் அதிகாரிகட்கும், இந்து அறநிலையப்பாது காப்புக் கழக ஆணையாளருக்கும், சோழ நாட்டிலுள்ள மூதன்மையான மூன்று ஆதீனங்களுக்கும், மயிலம், மதுரை, குன்றக்குடி முதலிய திருமடங்கட்கும், தில்லைத் திருமுறைக்கழகம், குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், சீர்காழி திருஞான சம்பந்தர் கழகம், ஆடுதுறை அப்பர் அருள் நெறிக்கழகம், குற்றாலம் சிவனடியார் திருக்கூட்டம் முதலியசைவ அமைப்புக்களுக்கும், எங்களுக்குத்தெரிந்த பல சோழநாட்டு அறிஞர்கள், அன்பர்களும், தக்கவர்கள் வழிக் கேள்விப்பட்ட தனிப்பட்ட அன்பர்கள் அறிஞர்கள், செல்வர்களுக்கும் தொடர்ந்து கடிதங்கள் எழுதினோம்; இரவும் பகலுமாக எழுதினோம்; எங்கள் அறிக்கைகளையும் திருப்பயண மலர்களையும் அனுப்பினோம்; விடை, விடைக்கு விடை என எழுதிக்கொண்டே இருந்தோம். விடை எழுதி ஊக்கமூட்டியவர்கள் சிலர்; தாமே முன்வந்து உதவிகள் பல செய்வதாக வாக்களித்தோர் சிலர்; விடை எழுதாமலே இருந்து, பயணக் காலத்தில் உணர்ச்சி பெற்று மிகச் சிறப்பாக வரவேற்பும் வசதிகளும் செய்தோர் பலர்; இயன்றது செய்வதாகக் கூறி எங்கள் திருக்கூட்டத்தைத் தம் பணி விடைகளால் நிறைச் செய்வதோர் சிலர் எதையுமே கவனிக்காமல் இருந்து விட்டவர்களும் உண்டு.

எங்கள் நிலை எதற்கும் அமைவானது வசதி கிடைத்கால் உருக்கத்தோடு நன்றியறிதலோடு பயன்படுத்திக் கொள்வது; கிடைக்கவில்லை அதற்காகச் சலிப்புற்று வருந்தி ஒதுங்கி விடுவதில்லை; எப்படியும் குறிப்பிட்ட திருவூர்களை வழிபட்டே தீர்வது; ஏற்ற வசதிகளை நாங்களே செய்து; கொள்வது இவையே எங்கள் முடிவுகள்.

14-5-54 முல்லைக் கொடியில், சோழ நாட்டுத் திருப்பயணத் திற்கு நாள் குறித்துவிட்டோம், 2-6-54 அன்று மாலை புறப்படுவதென்று வேண்டிய முன்னறிவிப்புக்களையும்,குறிப்புக்களையும் தக்க தென்றுபட்ட சில பயணகால நடைமுறைகளையும் அதில் தெரிவித்திருந்தோம், வழிபட விரும்பி வரையறை செய்த தலங்களின் பட்டியலையும் வெளியிட்டிருந்தோம்.

30-5-54 அன்று மாலை 4 மணிக்குச் சென்னை சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் பயணத்தில் கலந்து கொள்ளும் அன்பர்களின் கூட்டம் ஒன்றை நடத்திப் பயண காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு தொண்டுகளையும் விளக்கித் தொண்டர் படை ஒன்றையும் அமைத்தோம்.

இத் தொண்டர் படை அமைப்பில் ஆர்வமாகவே அன்பர் பலர் சேர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டார்கள். ஆயினும், பழக்கமின்மை, பயணத்தின் அலுப்பு, நெருக்கடி பரபரப்பு இவைகளால் அவர்களிற் பலர் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்யவில்லை என்று தெரிந்தது. எனினும், இறுதிவரை பொறுப்பாகப் பணி செய்தவர்களும், இயன்றவரை செய்தவர்களும், பொறுப்பேற்காமலே அவ்வப்போது முன் வந்து சூழ்நிலைகளுக் கேற்பத் தொண்டு செய்தவர்களும் பலராக இருந்தனர்.

பயிற்சி பெற்ற ஒரேவகைக் கூட்டங்களில் காணக்கூடிய அளவு கட்டுப்பாடு முதலிய தன்மைகளுக்கு, பல திறத்தினரும் தரத்தினருமான ஆணும் பெண்ணும்கலந்த பயிற்சி பெறாத இத் திருப்பயணக் கூட்டத்தின் கட்டுப்பாடு முதலிய தன்மைகள் எந்த வகையிலும் குறைந்திருக்கவில்லை என்றே தெரிந்தது.

இது நிற்க, சற்றேறக் குறைய இருநூறு அன்பர்கள பயணத்

தில் கலந்து கொள்வதாகத் தம் பெயர்களைப் பதிவு செய்திருந்தார்கள். புறப்பாட்டுக் கிடையில் ஒரு கிழமைதான் இருந்தது; 25, 26-5-54 வரை கூட எங்கெங்கே, யார் யார் எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள்; எந்தெந்த ஊருக்கு எப்படி எப்படிச் செல்ல வேண்டும்; வசதி செய்யப்படாத ஊர்களில் நாங்களே வசதி செய்து கொள்வதா? எப்படிச் செய்து கொள்வது? இவை பற்றி ஒன்றும் தெரியவில்லை.

சோழ நாட்டவர்களுக்குக் கடிதம் எழுதித் திருப்பயணத் திட்டத்தை வகுத்த சிறியேனுக்கோ உடம்பு சரிப்படவில்லை சில நாள் முன்னதாகச் சென்று தக்கவர்களைப் பார்த்து இயன்ற ஏற்பாடுகளைச் செய்யலாம் என்றால்; இவ்வகையில் அடியேனுக்கே தக்க பழக்கம் கிடையாது; வேறு தக்கவர் யார் இருக்கிறார்கள் அனுப்ப என்று விழித்துக்கொண் டிருந்தபோது அன்பர் R. நடராசன் அவர்களையே வேண்டிய குறிப்புகளுடன் அனுப்பலாம் என்று தோற்றியது; உடனிருந்து கடிதப் போக்கு வரவு செய்திருந்ததால் ஓரளவு அவர் தகுதியுடையவரா யிருப்பாரென்று தெரிந்தது.

ஆசிரியரும் அடியேனும் மாற்றி மாற்றி இவரைப் பாருங்கள் அவரைப் பாருங்கள், அந்த ஊருக்குப் போங்கள் இந்த ஊருக்குப் போங்கள் என்று ஏதேதோ குறிப்புக்கள் கொடுத்து 26-5-54 அன்று இரவு திரு. R. நடராசன் அவர்களையே சோழ நாட்டுக்கு முன் கூட்டி அனுப்பி வைத்தோம். ஒரு கிழமையில் அவர் யாரைப் பார்ப்பார்? என்னென்ன ஏற்பாடுகள் செய்வார்? எந்தெந்த ஊருக்கு வழி கண்டு வருவார்? என்றெல்லாம் எண்ணிக் கொண்டே இருந்தோம்.

உடல் நிலை எப்படி இருந்தாலும் புறப்பட்டு விட வேண்டியதுதான் .....வேறு வழி இல்லை...

திருவருள் காப்பாற்றும் என்று முடிவு செய்திருந்தேன்.

குடும்பத்தில் பெரியவர்கள் தடுத்தனர்; சிறியவர்கள் எதிர்த்தனர். வேறு சில சூழ்நிலைகள் குறிப்பிட்ட நாளில் புறப்பட விடவில்லை.

1-6-54 அன்றுதான் பயண அறிக்கைகள் அச்சாகி வந்தன. அடுத்துப் புறப்பட வேண்டிய 2-6-54 ந் தேதி மாலையும் வந்து விட்டது அன்று வரையிலும் ஏன் அடுத்துச் சில நாட்கள் கூட, மிகவும் நெருக்கடியாகச் சோழ நாட்டவர்களுக்குக்கடிதங்களும் திருப்பயண அறிக்கைகளும் அனுப்பிக் கொண்டிருந்தேன்.

திருப்பயணத்திற்கு உடன் செல்ல இயலவில்லை என்ற ஏக்கத்திலும், கடிதப் போக்கு வரவிலும் மூழ்கி இருந்ததால் திருக்கூட்டம் புறப்படுகிறபோது உடனிருந்து வழியனுப்பவும் மனங் கொள்ளவில்லை.

இருப்புப்பாதை அதிகாரிகளுக்கு எழுதியிருந்தோம். அவர்கள் திருக் கூட்டத்தாருக்கு என இரண்டு தனிப் பெட்டிகளைப் புறப்படும் வண்டியில் ஒதுக்கித் தந்தார்களாம்.

இவ்வளவே இத் திருப்பயணம் பற்றித் தொடக்க முயற்சிகள் என்று பொது முறையில் குறிப்பிடக் கூடியன. இம் முயற்சிகளும் முன்னேற்பாடுகளும் எங்களுக்கு ஒரு சிறிதும் மன நிறைவைத் தரவில்லை. ஆனாலும், பயணம் எப்படி நடக்குமோ? இருநூறு பேரை அழைத்துக் கொண்டு போகிறோமே? நல்ல முறையில் அவர்களை மீட்டும் அழைத்து வந்து சேர்க்க வேண்டுமே? என்ற கவலையும் கொள்ளவில்லை. திருவருள் துணை செய்யும்; சிறப்பாகவே திருப்பயணம் நடக்கும் என்ற உறுதியே உள்ளத்தில் ஊறிக் கொண்டிருந்தது.

இது நிற்க, பதிவு செய்து கொண்ட அன்பர்கள் எல்லோரும் எப்படியோ தத்தம் அலுவலிடங்களில் விடுமுறை பெற்றுக் கொண்டும், வாணிபம் முதலிய பல்வேறு தொழில்களையும், குடும்பக் கடமைகளையும் ஒதுக்கிவைத்தும் பயணத்திற்குத் தம்மை அமைவு செய்து கொண்டனர்.

சென்னையில் திருக்கூட்டங்களில் எல்லாம் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் கண்டால் "சோழ நாட்டு யாத்திரைக்குப் போகிறீர்களா? விடுமுறைக்கு எழுதிப் போட்டு விட்டீர்களா?" குடும்பத்தோடேயே போகிறீர்களா? எனக்குத்தான் விடுமுறை கிடைக்கவில்லை; இடையிலாவது சில நாள் கலந்து கொள்ளலாம் என்று பார்க்கிறேன்" என்பன போன்ற உரையாடல்கள் நிகழத் தொடங்கி விட்டன.

எப்படியோ 2.6-54 அன்று மாலை திருக்கூட்டம் அடியேனை விட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டது. புறப்பட்டுப் போன நாள்

முதல் திரும்பி வரும் நாள்வரை "இன்று இரவு புறப்படுவோம்! நாளை புறப்பட்டு விடுவோம்!" என்று 'திருநாளைப் போவார்' போல முடிவு செய்து கொண்டே இருந்தேன். எவரும் வழிவிட வில்லை. "சுவரை வைத்துத் தானே சித்திரம்; உடம்பைப் பாரப்பா! உடம்பை; உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே! என்கிறார் திருமூலர்" என்றெல்லாம் பழமொழிகளும் உபதேசங்களும் உருண்டு புரண்டன. உள்ளன்புடையவர்கள் உயிருக்குயிரானவர்கள், உற்றார் நண்பர் உறவினர் எல்லோரும் இப்படிப் பலபடக் கூறி நிறுத்தி விட்டனர். மனைவி மட்டும் தன் தாயை இழந்த நிலையிலும் "போகவேண்டும் என்றால் போய்த்தான் வாருங்கள்" என்று குறிப்பிட்டது ஓரளவு மகிழ்ச்சியையும் துணிவையும் தந்தது. ஆனால் எர்பி புலவர் முருகவேளின் கண்டிப்பான தடையை மீற முடியாமல் இறுதிவரை புறப்படாமலே இருந்து விட்டேன். பயணம் முடிந்து எல்லோரும் மீண்ட பின் 29-6-54 குருகுலத்திலிருந்து திருக்கழுக்குன்றத்துக்குப் புறப்பட்டனர். அவ்வப்போது அவர்களுடன் சேர்ந்து கொண்டு வழுவத்தூர் வந்து தங்கித் திருக்கழுக்குன்றம் அடைந்தேன். அதனால் திருப்பயணத்திற் கலந்துகொள்ளாத ஏக்கம் ஓரளவு குறைந்தது. என்றாலும் வாழ்க்கையில் எனக்கு ஒன்றும் ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பே இத் திருப்பயணத்தில் கலந்து கொள்ளாதது.

—குருகுலச் செய்தியாளர்.

# திருமுறைகளும் திருப் பயணமும்

(முன் தொடர்ச்சி)

இனி, சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், சைவ சமயப் பெருமக்கள் நால்வரின் தேவார திருவாசகங்களே முதலிடம் பெற்றவை என்பது சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. பொதுக் கண் கொண்டு நோக்கில் அவை வெறும் தோத்திரப் பாடல்களாய் அமைந்ததாக எண்ணப் பெறும். ஆயினும், இத் திருமுறைகள் மக்கள் வாழ்வின் ஏற்றத்துக்கும், அம் மக்களை உறுப்பாகக் கொண்ட ஒரு சமுதாய நாகரிக வளர்ச்சிக்கும் எக்காலத்துக்கும் இயைபுடைய ஓர் இன்றியமையா நிலைக்களன் என்பதை அகற்கொத்த பக்குவமுடையாரெல்லாம் துணிவர்.

சமய வளர்ச்சியை மக்களின் உள்ள வளர்ச்சியை ஓவியமாகத் தீட்டிக் காட்டும் வரலாறாகக் கொள்ளின், இத் திருமுறைகள் உலகின் ஒரு குறிப்பிட்ட இனத்தின் உள்ளம் சில நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே 'எவரஸ்டு' சிகரத்தை ஒப்ப வளர்ச்சியுற்றதற்குச் சான்று பகர்வனவாயுள்ளன. எனவே, அகவளர்ச்சிக்குரிய ஒரு விழுமிய நெறியை அவை தன்னகத்தே கொண்டுள்ளன வென்பதும் தெளிவாகும்.

வரலாற்றுக் கண் கொண்டு ஆராய்ந்தால், இத் தண்டமிழ் நாடு அறவாழ்விலிருந்து பிழைபட இருந்த ஒருகாலத்தில், இயல்பான நாகரிக முன்னேற்றம் தடைப்பட எதுவான பொய்ச் சமயக் கோட்பாடுகள் வேரூன்றிய ஒரு காலத்தில், சிறந்த பாதுகாப்பாக நாட்டைச் செந்நெறியினின்று வழுவாது நடத்திச் செல்ல அருளால் எழுந்தவைதான் இத் திருமுறைகள்!

அழிந்துபட வளர்ந்துவரும் இவ்வுடலின் ஓர் உறுப்பாகிய மூளையினடியாகப் பிறக்கும் அறிவால் ஆராயத் தகுதியற்றவை அவை உயிரோடு பிரியா இயல்புள்ள இந்த 'உள்ள'த்தால் உன்னி அதனால் அவ்வுள்ளம் நெகிழ்ந்து மென்பதப்பட்டு வன்மையுற அமைந்தவை. எனவே பண்ணோடு காதல் கசிந்து கண்ணீர் மல்கி ஓசத் தக்கவை. அதன் பயன் அங்குதான் தெளியப்பெறும்.

இவ்வுருக்கத்தில் பதிந்து பண்பட்ட உள்ளம் திட்டமாகத் தொண்டுக் கென்றே வாழும் நீர்மையது!

இத்திருமுறைகளை ஓதிவருவதோடு அவைதோன்றிய இடங்களுக்கே சென்று வழிபட்டு அவற்றை உணர்ந்து உருகமுயலுதல் வேண்டும்... இப் 'பித்தஉலகர் பெருந்துறைப் பரப்பினுள்........ புல்வரம்பாய பல துறை" நாட்டத்தினின்று ஒரு சிறிது ஓய்வு பெற்று அருளாட்டத்தில் மூழ்கி அகநாட்டமும் அறவாழ்வும் பெறுதல் வேண்டும் என்றே ஆண்டுதோறும் சில கிழமைகள் ஆசிரியர் தம் அன்பர் மாணவர்களுடன் திருக் கூட்டமாகத் திருமுறைப் பாடல்பெற்ற திருவூர்களுக்குத் திருப்பயணம் செல்கிறார் அதில் ஒரு பகுதியே அண்மையில் அவர்கள் மேற்கொண்ட சோழநாட்டுத் திருப்பயணம்!

—பா. வரதராசன்.

Telegrams: "RAMBROS"
N.Ramu Bros,
GENERAL HARDWAKK
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

# சோழ நாட்டு யாத்திரை--
# ஆசிரியர் விரிவுரைகள்

(மோகனரங்கன்)

திருக்கடம்பூர்
(5-6-1954, சனிக்கிழமை)

திருக்கடம்பூர் என்பது திருக்கடம்பை என்றானது; (கருந்தட்டான் குடி கரந்தை என்றும் தஞ்சாவூர் தஞ்சை எனவும் மாறியதுபோல) "தென் கடம்பைத் திருக் கரக் கோயிலான்" என்பதால் இவ்வூர்ப் பெயர் தென்னாட்டுக் கடம்பை என்றும் கோயிலின் பெயர் 'கரக் கோயில்' என்றும் விளங்குகின்றது.

கரக்கோயில் என்றால் கையுள்ள கோயில்; கள்ளத்தனமான கோயில் என்றும் இருவகை பொருட்படும்: வழங்குவதில் தாராளத் தன்மை; நீளமான கை யுடையதால் தாராளமாய் வாரி வாரி வழங்கும் பொருத்தம் போலும். ஞான சம்பந்தருக்கு முத்துப் பல்லக்கு, முத்துக் குடை கொடுத்த இடம். சோழ நாடு கலையிலும் நாகரிகத்திலும் வளர்ந்த நாடு. சிவபெருமான் கங்கை, கொன்றை யுடையவன்; காவிரியும், கொன்றையுமுடையவன்; கங்கைக்குப் பதிலாக காவிரியை தாராளமாய் மேலாகக்கூட கூறலாம் கைலாயத்தி லிருந்து கங்கை வந்தது. அவ்வரவு கைலாயபதிக்குப் பிடிக்காமல் தெற்கே வந்து விட்டார் மெதுவாய் இங்கேயே சோழ நாட்டிலேயே தங்கிவிட்டார், அப்படிப் பட்டவளமான நாடு இது. "காவிரி கொன்றை கலந்த கண்ணுதலான் "பண்பினைப் பாடல் பயில்வார் பாவம் யிலாதார்;" பாவம்போகசுலபமான வழிஎது? அபிஷேகம் தீபாராதனை முதலியன செய்து வணங்குதலால் போய்விடாது; இவைகளால் அது ஓரளவு தளர்ச்சியுறும்; அதற்கு போக மனமிராது போக்க சரியானவழி வழிபடுவதேயாம். உள்ளமுருகி பாடினால் தான் போம்; பாவத்தை நீக்குகின்ற நிலைமையிலிருப்பது இந்த நாடு; வளத்தில் சிறந்திருக்கிறது. பேதம், உருவம், நிலைமை, வேற்றுமை ஏதும் பாராமல் எல்லாருக்கும் வாரி வழங்குகிறது; அதனால் கை நீளமாயிருக்கிறதென்பது பொருந்தும்.

மூர்த்திகள் சிற்பங்கள் ஒரே அழகான வடிவங்கள். உள்ளே கவசம் போட்டு மேலே மெல்லிய ஆடை போர்த்திருப்பது பின்னும் கவர்ச்சி. இலிங்கம் பளபளப்பா யிருக்கிறது; அருள் நிறைந்து முகம் தேஜஸா யிருக்கிறது. நம்மோடு கூடவேயும் ஒரு அருள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அர்த்தநாரீஸ்வரர் இலிங்கோத்பவர் முகலிய வொவ்வொரு மூர்த்தமும் மிகக் கவர்ச்சியாய் இருக்கிறது ஆனாலும் நாம் மிக வேகமாய் ஓடிக்கொண் டிருப்பதால் நிதானமாய் அழகுகளை அநுபவிக்க முடியவில்லை; காரணம் இச் சோழ நாட்டில் 190 பாடல் பெற்ற தலங்களை தரிசிக்க வேண்டி யிருப்பதே.

ஆண்டவன் ஒரேமாதிரி யிருந்தாலும் அருள் பெற்ற பெரியோர் வேறு வேறு மாதிரி இருப்பர். ஓதுவா மூர்த்திகள், முப்போதுந் திருமேனி தீண்டும் சிவாச்சரியார்கள், நல்ல பெரு மக்கள் முதலியோரை க்ஷேத்திரந்தோறும் காண்பதோடு, ஆறு, சோலை, ... சாலை முதலிய இயற்கை வனப்புகளையும் கண்டு களித்து செல்வோம்; எங்கும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களைப்போல் பழகி அளவளாவி மகிழ்கிறோம்.

இரண்டாவதாக கள்ளக் கோயில் பொருளில் பார்க்கலாம். கள்வன் இருக்கும் கரக் கோயில் இறைவன் முதல் திருடன், கிருஷ்ணன் வெண்ணெய், பால், தயிர் திருடியுண்டான் என்கிறோம் இவன் இருக்குமிடம் தெரியாமல் தன்னையும் மறைத்துக் கொண்டு நம் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு போன பெருந்திருடன்! இப்படி தொடர்ந்து முன்பின் தெரியாத யிடங்களில் ஏராளமான ஏற்பாடுகள் வசதிகள் வரவேற்புகள் சிறப்புகள், உதவிகள் எல்லாம் இப் பெருமக்கள் வாயிலாக காத்து நின்று தானே செய்கிறான்! தொண்ட நாட்டு யாத்திரையின்போது சிறிது கஷ்டப் பட்டதைக் கண்டான்; திரு அரசியலில் காட்டாண்பாக்கத்து தம்பதிகளை எங்களுக்கு காட்டி நடுநாட்டு யாத்திரை முழுதும் அவர்கள் உடனிருந்து உதவிகள் செய்து இனிது நிறைவேற்றச் செய்தனர். இங்கும் புதிய க்ஷேத்திரங்களிலும் அமோக வரவேற்புகள் தொடர்ந்து செய்து கொண் டிருக்கிறான்: மறைந்து நிற்கிறான்; ஆனாலும் செயல்கள் பிரமாதமாய் செய்து காண்பிக்கிறான் கரக்கோயில் கள்வன்! நம்மை அதிதீவிர பக்குவிகளாக்கி அடியார் நடுவில் யிருக்கும் அருளைப் புரிகின்றான்! அத் திருடனைப் போலவே நாமும் இருக்குமிடம் தெரியாதிருந்து ஆடம்பரமின்றி "நாம் செய்கிறோம்" என்னும் செருக்கின்றி உலகிற் பெருங் காரியங்களைச் செய்யவேண்டாமா?

ஆண்டவன் நல்லவர்கள் உள்ளங்களில் தோன்றி நலம் பல செய்கின்றான். நல்ல விஷயங்களில் தளரா கையுடனும் இருக்குமிடம் தெரியாமலிருந்து கொண்டு அரும் பெருங் காரியங்கள் நிறைவேற்றிக் கொண்டும் 'தன் பெருமை தானறிய தத்துவ'னாகி கரந்து நிற்கும் பெருங்கள்வனின் உறையிடம் இக் காரக்கோயில்!

'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடனடியேனையுந் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே'

(சுந்தரர்)

## திருக்கானாட்டு முள்ளூர் (கானாட்டம்புலியூர்) 5-6-54 சனி

கானாட்டுமுள்ளூர் எங்களுக்கு வான் காட்டும் வளவூராக இருக்கின்றது. மிகவும் உழைப்பெடுத்து இவ்வூர்ப் பெருமக்கள் எங்களுக்கு வரவேற்பு வசதிகள் செய்துள்ளார்கள். நல்ல பலன் எங்களுக்கும் எல்லாருக்கும் அவன் வழங்குவது உறுதி. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' எனப் பெரியோர் சொல்லி யிருக்கின்றனர். உழவு, அதாவது பயிர்; உழைப்பால் நேருவது; அதன் பலன் இந்த க்ஷேத்திரத்தில் எல்லோருக்கும் கிடைத்தது.

புதிய ஆலயம் கவர்ச்சியாய் இருக்கும்; இவ்வாலயம் பழமையாயிருப்பதே இன்னும் கவர்ச்சி. காரணம் புதிய கட்டடத்தை விடப் பழைய கட்டடத்தில் நம் மூதாதையர் திறமையை, ஆற்றலை, போக்குகளைக் காண முடிகிறது. பழைய நண்பர்கள், பழைய மூதாதையர்களைப் பார்த்தால் எப்படியோ அப்படி யிருக்கிறது. சிவலிங்கப் பெருமான் அமைப்பு மேலும் கவர்ச்சி; அழகான திருவாசியுடன் விளங்குகிறது இறைவன் இவ்வூர்ப் பெருமக்கள் தக்கவர்கள் உள்ளங்களில் புகுந்து அன்பைச் சொரியச் செய்கின்றான்!

நமக்கு யார் தலைவர் எனத் தெரியாத நிலையிலிருக்கிறோம். நால்வர் எல்லாம் வல்ல சிவன் தான் நமக்குத் தலைவனெனத் தேர்ந்தெடுத்துக் கொடுத்துள்ளார்கள். அந் நால்வர் சந்நிதி ஒவ்வொரு கோயிலிலும் அமைத்திருக்கின்றார்கள். 'அகர முதலவெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு' யெனச் சொல்லி யிருக்கும் உலகப் பொதுமறைத் திருக்குறளின் அடிப்படையில் நிகழ்வது எங்கள் குருகுலம். எழுத்துக்கு முதல் அ. ஒவ்வொரு எழுத்திலும் அ முதலாக எழுந்து நிற்கிறது. வாயை திறவாமல் எந்த எழுத்தும் உச்சரிக்க முடியாது; வாயை திறந்ததும் அ ஒலிக்கிறது. (தாய் குழந்தையை அ என்று வாயைத் திற என்கிறாள்!) அதனால் அ யின்றி எதும் பேச முடியாது; எது ஒன்று சொன்னாலும் நமக்குந் தெரியாமலேயே அ கூடவே இருக்கிறது. அப்படியே உலகுக் கெல்லாம் ஒரு தலைவனான இறைவன் முதன்மை பெற்று விளங்குகிறான்- அத் தலைவனின்றி எதொரு காரியமும் செய்ய முடியாது அவன் நம் உள்ளும் புறமும் பக்கங்களிலும், 'பார்க்குமிட மெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண' நிலையில் அத்வைதமாய்க் கலந்து நிற்கின்றான்; 'எங்கும் மறைந்து நின்றுளன் மாமணிச் சோதியான்.' தன்னை இல்லை என்று மறுத்துப் பழிக்கும் நாத்திகரையும் விட்டு நீங்கான்! அத் தலைவனையே நம் பெரியோர்கள் சிவம் என வழங்கி வழிபட்டனர். இவ் வழிபாடு மிக மிகப் பழமையானது; கணித்துரைக்க முடியாத பழங்காலம். சிவம் என்னும் பெயர் எப்போதிருந்து வழங்கப் படுகிறதெனச் சொல்ல முடியவில்லை. சங்க நூற்களில் இப் பெயர் சொல்லப்படவில்லை; ஆனால் முக்கண் பெருமான், தாழ் சடை தங்கும் பெருமான், காமனைக் காய்ந்த கண்ணுதலோன், முதலிய பெயர்களை வழங்கியுள்ளனர். ஒருவேளை மாணிக்க வாசகப் பெருமான் காலத்துக்குச் சிறிது முன்னிருந்து இப் பெயர் வழங்கி வருகிறதோ என எண்ண இடமிருக்கிறது; 'செம்மையேயாய சிவபத மளித்த செல்வமே சிவபெருமானே' என அருளியிருப்பதால் பழைய காலத்தில் முருகனுக்குச் சேயோன் எனப் பெயர்; சேயோன், செம்மையோன் சிவன் எனத் திரிந்திருக்கலாம் அதற்கப்பால் அப்பர் பெருந்தகை 'சிவனெனும் நாமம் தனக்கே யுரிய செம்மேனி யெம்மான்' எனப் போற்றியுள்ளார். அமெரிக்கா கிழக்கிந்தியத் தீவுகள், மடகாஸ்கர் முதலாக உலகெங்கும் இச் சிவ வழிபாடு பரவி யிருந்திருக்கிற தென்பதற்குச் சான்றுகளுள. ஆங்காங்கு சிவலிங்கங்கள், மூர்த்திகள் முதலியன கண்டெடுத்துள்ளனர்; தென்னாடுடைய சிவன் எந்நாட்டிற்கும் எவ்வளவோ காலந் தொட்டு இறைவனாகியுள்ளான்!

மிகப்பழைய காலந்தொட்டு இலிங்கம், அம்பல வாணர், முருகன், பிள்ளையார் முதலிய மூர்த்திகளுடன் சிவவழிபாடுண்டு. இறைவன் எல்லா அண்டங்களையும் அசைத்து ஆடுகின்றான். வட்டமும் நீட்டமுமான இயக்கம் எதிலுமுளது; நீள நடந்து போய்தான் சுற்றி வருவதும் நீட்ட

மும் வட்டமுமான நிகழ்ச்சி எதிலும் காண்கிறோம்; வாண வெடி நீளமேலெழும்பிப் போய் வட்ட வடிவமாக வெடிக்கிறது; கொடி வட்ட வட்டமாக சுற்றிக் கொண்டே நீண்டு மேலே போகிறது. இவ் வுலகில் ஒவ்வொரு செயலும் இப்படியே நீட்டமும் வட்டமுமாக நிகழ்கிறது. எல்லா உருவங்களும் பொருள்களும் வட்டமும் நீட்டமும் கலந்துள்ளன. குழந்தை வளர்ந்து இளங் காளையாகி மறுபடி தளர்வெய்தி முதிர்ந்து கிழமாகிப் பழைய குழந்தைத் தன்மைக்கே வருகிறது ஓர் வாழ்க்கை வட்டம்! கடலிலிருந்து நீர் ஆவியாகி மேலேயுயர்ந்துபோய் மேகமாகி, வானமெங்கும் ஓடியாடி மறுபடி நீராய்ப் பொழிகிறது. இப்படியே ஒவ்வோர் இயற்கை இயக்கத்திலும் செயற்கைச் செயலிலும் இவ்வியக்கங்களெல்லாம் இறைவனின் திருநடனமே. இப்படி எங்கும் எதிலும் நடக்கும் நிகழ்ச்சியை உணர்த்துவதே இலிங்கம். வட்டமும் நீட்டமும் கலந்த உருண்டை வடிவம்; ஆவுடையார் வட்டம் அதன் மீது நீண்டு உருண்டையான வடிவம் சேர்ந்து இலிங்கம். இதுவே இறைவனின் அருவுருவ நிலையுணர்த்தும் அடையாளம். உடம்பின் மீது தலையிருப்பது ஆவுடையார் மீது இலிங்கமிருப்பது போன்று இருக்கிறது. இப்படி இலிங்காகாரமாய் உங்கள் அனைவரையும் கண்டு வணங்குகிறேன்! ஓர் ஆங்கிலப் பெருமகன் (Cork....) "இவ்விலிங்க வழிபாடு முதன் முதலில் இந்திய தேயத்தில் தமிழ் வழங்கிய பழம் பாண்டி நாட்டினின்றும் தோன்றி உலகெங்கும் பரவியது" என்கிறான். இதனை நிரூபிக்கச் சான்றுகளுமுள. இன்று தமிழன் இப் பெருமைகளை யுணராது மறந்து எடுப்பார் கைப் பிள்ளையாகி நிற்பது மிக அவலமான நிலை!

இப்படி எல்லா இலக்கணங்களிலும் சிறந்த சிவனை நமக்குத் தலைவனாக தேர்ந்தெடுத்துக் காட்டியுள்ளார்கள் நால்வர்கள். அப் பெருமானிடம் பக்தி செலுத்தி உய்வோமாக!

திருஓமாம் புலியூர்
(5-6-54 சனிக்கிழமை)

மேற் கூறியபடி சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு அவனை வழிபட்டு பக்தி பண்ணவேண்டும். தக்க குருவை யடைந்து சிவ தீட்சை பெற்று முறையாய் மந்திரம், கிரியை, யோகம், பாவனைகளுடன் வழிபடலாம்; அல்லது இவைகளை தம் முறையாய்த் தெரியாமற் போனாலும் அவனை நினைந்துருகி பக்தி பூணலாம்.

ஓம் ஹாம் சௌம் முதலியன சிவ மந்திரங்கள். ஓம் ஹாம் புலியூர் என சிவ பீஜாக்ஷரங்களால் இத் தலத்திற்குப் பெயரமைக்கப் பெற்றுள்ளது. இத் தலத்திற்கு நிறைய வேள்விகள் இடைவிடாது செய்திருந்ததால் இப் பெயர் வாய்க்கப் பெற்றிருக்கும். அகல் விளக்கு இலிங்கத் தோற்றம். அகல் ஆவுடையார் போன்றும் தீப்பிழம்பு இலிங்கம்போல. உள்ளே ஞான வெளியிலிருந்து இலிங்கம் ஜோதியாக எழுவது; வேள்வி செய்து அக்னி எழுவதில் இப்படி இலிங்க பாவனை கொள்ள வேண்டும். ஓம் முதலிய மந்திரங்களைக் குருமூர்த்தமாக அறிந்து சொல்லி பாவிக்க நல்ல பலன் இல்லாமற்போனாலும் ஓம் மட்டும் சொன்னாலும் புலனடக்க மடையலாம். தெரிந்து அல்லது தெரியாமல் மந்திரம் ஜபித்தாலும் பலனுண்டு; வீண்போகாது. ஓம் என நீள இழுப்பதற்கும் அடக்குவதற்கும் அளவு உண்டு. ஓம் என 12 மாத்திரை நேரம் இழுக்கலாம். 12 நல்ல கணக்கு; ஓங்கார வடிவினனான பிள்ளையாருக்கு 12 சுற்றுகள் வலம் வருவது, 12 தேங்காய் உடைப்பது, 12 தோப்பு காணம் போடுவது, 12 குட்டுகள் குட்டிக் கொள்வது எனக் குறித் திருக்கின்றனர்!

(வரும்)

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம் மதுராந்தகம். (அஞ்)